வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென் தனிப்பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 635—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் 13 ஆவது கூட்டத்தின் 3 ஆவது தீர்மானத்தின்படி வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென தனி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனைப் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13 வது கூட்டத்தின் 3வது தீர்மானத்தின்படி வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென 24 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலவர் அவர்களே, சில தொழில்கள் அபாயகரமான தொழில்கள் ஹஸார்டுவஸ் இன்டஸ்ட்ரீஸ். அந்தத் தொழில்கள் செய்வதன் மூலமாகக் காச நோய் வருகின்ற நிலை சிலருக்கு உண்டு. உதாரணமாக, மைன்ஓர்க்கர்ஸ், கெமிக்கல் அண்ட் பெர்ட்டிலைசர்ஸ் ஓர்க்கர்ஸ், பீடி ஓர்க்கர்ஸ், இன்னும் அனல் மின் நிலையத்தில் வேலை செய்பவர்களுக்கெல்லாம் காச நோய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அரசுக்குச் சொந்தமான எல்லா மருத்துவ மனைகளிலும், குறிப்பாக, இந்த மாதிரியான ஹார்டுவஸ் ஓர்க்கர்ஸுக்குக் கட்டாயமாகப் படுக்கைகள் ரிசர்வ் செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அரசாலேயே, காச நோய் மருத்துவ மனைகள் நிரம்ப ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கென தனியாக அந்தப் பகுதிகளில் தேவையென தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வருவார்களேயானால், அந்த வாரியத்தின் தலைவர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் உட்கார்ந்து ஆலோசனை செய்து, பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய முடிவுகள் எடுத்துச் செயல்படுத்துகின்றோம்.

திரு. ஜே. ஹேமச்சந்முரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூர் காச நோய் மருத்துவ மனையில் இட ஒதுக்கீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பீடித் தொழிலாளர்களுக்குத் தனியாக செஸ் நிதியில் இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படுகிறதா? அப்படியென்றால், செஸ் நிதியிலிருந்து இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழிலாளர் நல வாரியம் சம்மந்தப்பட்ட கேள்வி. செஸ் நிதி பற்றியது அல்ல. இருந்தாலும் அந்த செஸ் நிதிகூட நிறுத்தப்பட்டு, இந்த அரசினுடைய முயற்சியால் அதை மத்திய அரசாங்கம் மீண்டும் கொண்டு வந்திருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அந்த 24 படுக்கைகளை மேலும் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா? 24 படுக்கைகளை இவர்களுக்கு ஒதுக்கிவிட்டால் பொது மக்களுக்கு இட நெருக்கடி ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்த 24 படுக்கைகள் தனியாக அந்தத் தொழிலாளர்களுக்காவே கட்டப்படும். பொதுமக்களுக்கு என்று இருக்கும் படுக்கைகளில் இருந்து எடுத்துக் கொள்வதில்லை. தனியாக இது கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இவர்களுக்குத் தனியாக கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும்? தொழிலாளர்களிடத்தில் எப்போது ஒப்படைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட கோப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, பொதுப்பணித் துறை, மற்றும் நிதித் துறைக்கு 2-3-1982 அன்று அனுப்பப்பட்டுள்ளது. விரைவிலே அது வரப்பட்டவுடன் வேலைகள் துவங்கப்படும்.